DEPOSITION OF THE WITNESS
IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM
**Case no: CC.No. 02/2023**
**prosecution witness: Pw 3**

| | | | |
|---|---|---|---|
| Name | : | Caste | : |
| Fathers Name | : | calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

வாக்குமூலம்
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்
வழக்கு எண்.C.No./20

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பிரியா | ஜாதி | : |
| த/பெ. | : | தொழில் | : |
| கிராமம் | : | சமயம் | : |
| தாலுகா | : | வயது | : |

**21.03.2023**
முதல் விசாரணை:

1. நான் குஞ்சார் வலசையில் வசித்து வருகிறேன். வீட்டுகுடித்தனம் செய்து வருகிறேன். அ.சா.1 ஐ தெரியும். எதிரியை தெரியும்.கடந்த 10.02.2022-ம் தேதியிலிருந்து 1 வாரமாக அ.சா.1க்கும் எதிரிக்கும் சண்டை நடந்து வந்தது.ஆரம்பத்தில் எதிரியின் பைக்கை அ.சா.1னின் வீட்டின் முன்பாக நிறுத்தியிருந்ததை அ.சா.1 தள்ளி நிறுத்தசொன்னதால் பிரச்சனை ஏற்பட்டது. பின்னர் நான் இங்கு தான் நிறுத்துவேன் தேவடியா என்று அசிங்கமாக பேசி உன்னால் என்ன செய்யமுடியும் என்று கூறினார்.

2. நாங்கள் எதிரியிடம் சென்று சின்ன பிள்ளைகள் இருக்கும் இடத்தில் ஏன் இப்படி பேசுகிறீர்கள் என்று கேட்டதற்கு நீ என்ன டி தேவடியா என்று அசிங்கமாக பேசினார். பின்னர் எனக்கு இரவு 11,12 மணிக்கெல்லாம் போன் மூலம் i luv u சொல்லி, நீ என்ன டி தேவடியா என் மீது கேஸ் கொடுப்பது என்று மிரட்டினார்.என் கணவர் இல்லாத நேரத்தில் என் வீட்டு முன்பாக இருசக்கர வாகனத்தை raise செய்து என்மீது ஏற்ற வந்தார். காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தால் அதற்கும் உன்னை அசிங்கப்படுத்துவேன் என்று கூறினார்.பின்னர் அ.சா.1 பிள்ளைகளை அசிங்கமாக பேசியபின் என்

கணவர் எதிரியிடம் இவ்வாறு பேசாதீர்கள் என்று சத்தம் போட்டார்.பின்னர் நாங்கள் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம். அந்த சமயம் எதிரி வெளியூரில் இருந்ததால் அவர் வந்த பிறகு விசாரிப்பதாக போலீசார் கூறினார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1.எதிரி வெளியூரில் இருக்கும் போது அவர் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம் என்றால் சரிதான். எதிரிக்கும், உஷா வீட்டிற்கும் கிட்டதட்ட 10 நாட்களாக பிரச்சனை இருந்து வந்தது என்றால் சரிதான்.தற்போது சொன்னதை தான் போலீசார் விசாரணையிலும் சொன்னேன் என்றால் சரிதான். நானும், வழக்கு சம்பந்தமாக ஒரு புகார் மனு கொடுத்துள்ளேன். நான் கொடுத்த புகார் மனுவின் பேரில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. நான் தற்போது முதல் விசாரணையில் சொன்ன விபரத்தை புகார் மனுவிலும் சொல்லியுள்ளேன்.

2. இந்த வழக்கு விபரங்கள் எல்லாம் உஷா சொல்லி தான் தெரியும் என்றால் சரிதான். சண்டை நடக்கும் போது நான் பார்த்தேன். இருசக்கர வாகனத்தை எதிரி வீட்டிற்கு கொண்டு செல்லமுடியாது மணல் பாதை என்றால் சரிதான்.பைக்கு நிறுத்துவது சம்பந்தமாகவும், இடம் சம்பந்தமாகவும் அவர்களுக்குள் 10 நாட்களாக சின்ன சின்ன பிரச்சனை இருந்து வந்தது என்றால் சரிதான். உஷா புகார் கொடுத்த பிறகு தான் எதிரிக்கும் புகார் கொடுத்த விபரம் தெரியும்.

3. நான் உஷா அனைவரும் தூரத்து உறவினர்கள் என்றால் இல்லை அந்த தெருவில் இருக்கம் போது உறவு முறை சொல்லி பேசிக்கொள்வோம்.எதிரி, உஷா மீதுகொடுத்த புகாருக்காக நான் உஷா எல்லாம் சேர்ந்து எதிரி மீது நடக்காத சம்பவத்திற்கு புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. நான் கொடுத்த புகார் மீதும் நடவடிக்கை எடுக்கவில்லை, என்னிடமும் போலீசார் தனியாக விசாரிக்கவில்லை என்றால் சார்பு ஆய்வாளர் இல்லாத நேரத்தில் காவல் நிலையம் சென்றதால் புகார் கொடுத்துவிட்டு வந்துவிட்டோம்.

வழக்கு சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை. வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசுத் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்ககோரி அனுமதி அளிக்கப்பட்டது.)

அரசு தரப்பு குறுக்கு விசாரணை:

போலீசார் விசாரணையில் தற்போது உண்மையை மறைத்து எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

நான் இராமேஸ்வரம் காட்டுபிள்ளையார் கோவில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். வழக்கு சம்பந்தமாக நான் காவல்நிலையத்தில் எதிரிகளை குறிப்பிட்டு புகார் எதுவும் அளிக்கவில்லை. என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் மட்டும் என்னுடையதுதான். அதிலுள்ள விபரங்கள் பற்றி எனக்கு தெரியாது. அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.**1** ஆகும். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசுத் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்ககோரி அனுமதி அளிக்கப்பட்டது.)

அரசு தரப்பு குறுக்கு விசாரணை:

போலீசார் விசாரணையிலும், புகார் வாக்குமூலத்திலும் தெரிவித்துவிட்டு தற்போது உண்மையை மறைத்து எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜராகி போதிய வாய்ப்பு கொடுத்தும் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவித்தார்.

நான் இராமேஸ்வரம் அண்ணா நகரில் குடியிருந்து வருகிறேன். வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் மட்டும் என்னுடையது. அது அ.சா.ஆ.**2** ஆகும். அந்த கையெழுத்தை நான் நகர் காவல்நிலையத்தில் வைத்து போலீசார் கேட்டுக்கொண்டதற்காக போட்டுக்கொடுத்தேன். அதிலுள்ள விபரங்கள் எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசுத் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்ககோரி அனுமதி அளிக்கப்பட்டது.)

அரசு தரப்பு குறுக்கு விசாரணை:

கடந்த 10.01.2018-ம் தேதி 15.45 மணிக்கு நானும், சதீஸ்குமார் என்பவரும் வழக்கின் சம்பவ இடத்தில் நின்று கொண்டிருந்ததாகவும், அங்கு வந்த இராமேஸ்வரம் நகர் காவல்நிலைய சார்பு ஆய்வாளர் எங்கள் இருவர் முன்னிலையிலும் பார்வையிட்டு தயார் செய்த பார்வை மகஜரில் நானும்,

சதீஸ்குமார் என்பவரும் கையொப்பம் செய்ததாகவும் கூறிவிட்டு தற்போது உண்மையை மறைத்து எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

<u>அரசு தரப்பு மறுவிசாரணை:-</u>

அரசு தரப்பு வழக்கு சம்பவத்தை நேரில் பார்த்தாக போலீசார் விசாரணையிலும் தெரிவித்துவிட்டு தற்போது உண்மையை மறைத்து எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

நான் குஞ்சார் வலசையில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். வழக்கு சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை. வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசுத் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்ககோரி அனுமதி அளிக்கப்ட்டது.)

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:</u>

மிரட்டியதாக போலீசார் விசாரணையிலும் தெரிவித்துவிட்டு தற்போது உண்மையை மறைத்து எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(அரசுத் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்ககோரி அனுமதி அளிக்கப்ட்டது.)

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:</u>

அரசு தரப்பு வழக்கு சம்பவத்தை நேரில் பார்த்ததாக போலீசார் விசாரணையில் தெரிவித்துவிட்டு தற்போது உண்மையை மறைத்து எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

<u>சாட்சி **Crmp.2701/2022-**ன் படி ஏற்பட்ட உத்தரவுப்படி மீண்டும் வரவழைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்:-</u>

<u>அரசு தரப்பு மறுவிசாரணை:-</u>

இந்த வழக்கின் எதிரிகள் மீது பிரிவு **82 Crpc** படி பிரகடனப்படுத்தப்பட்டு உள்ளது அது

சம்பந்தமாக **Crpc** பிரிவு **299-**ன் கீழ் எதிரிகள் இல்லாமல் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் ஆஜராகி போதிய வாய்ப்பு கொடுத்தும் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவித்தார்.